## பொது ஆலோசனை

மலேசியாவில்வாழும் இந்திய வம்சாவளியினர்,கீழே கொடுக்கப்பட்ட நிலைமைகளில்உடனடியாக தங்களது கடப்பிதழ்களைப்மீண்டும்புதுப்பிக்க விண்ணப்பம் செய்ய வேண்டும்.

## I )கையால் எழுதப்பட்ட கடப்பிதழ்

சர்வதேச சிவில் விமான போக்குவரத்து அமைப்பு, நவம்பர் 24, 2015-குள் உலகளாவிய நிலையில்இயந்திரம் வாசிக்க முடியாத(non-Machine Readable Passports (MRPs) கடப்பிதழ்களை நடைமுறையில் குறைத்து வருகின்றது.நவம்பர் 25, 2015 முதல் வெளிநாட்டு அரசாங்கங்கள், இயந்திரத்தில் வாசிக்க முடியாத (MRPs) கடப்பிதழ்களில் பயணிப்பவர்களின்நுழைவை நிராகரிக்க கூடும்.

2001-ஆம் ஆண்டு முதல், இந்திய அரசாங்கம் இயந்திரம் வாசிக்கக் கூடிய **(MRPs)** கடப்பிதழ்களைவழங்கத் தொடங்கியது. இருந்தபோதிலும், 2001-ஆம் ஆண்டிற்கு முன்னதாக வெளியிடப்பட்ட கடப்பிதழ்கள், குறிப்பாக 1990-ஆம் ஆண்டுகளின் இடைக்காலத்தில் 20 வருடங்கள் கால வரையறை கொண்டுள்ள கடப்பிதழ்கள் யாவும் இயந்திரத்தால் வாசிக்க முடியாத (MRPs) பிரிவில் அடங்கும்.கையால் எழுதப்பட்டு புகைப்பட இணைப்புடன் இருக்கும்அனைத்து கடப்பிதழ்களும்இயந்திரத்தால் வாசிக்க முடியாதவை.நவம்பர் 2014-ஆம் ஆண்டு இறுதிக்குள், சுமார் 286-யிரம் கையால் எழுதப்பட்ட கடப்பிதழ்கள் நடைமுறையில் உள்ளதாக மதிப்பிடப்பட்டுள்ளது.

மலேசியாவில்வாழும்இவ்வகையான கடப்பிதழ்களைக்(**non-MRPs**)கொண்டுள்ள இந்தியர்கள், **நவம்பர் 24, 2015-குள்,**தங்களது கடப்பிதழ்களை உடனே மீண்டும்புதுப்பிக்க வேண்டுமென கேட்டுக் கொள்ளபடுகின்றனர். இதனால் அவர்கள் தங்கள் கடப்பிதழ்களில் வெளிநாட்டுப் பயணம் மேற்கொள்ளும் போது விசா பெறுவதில் ஏற்படும் சிக்கல்களைத் தவிர்க்கலாம்.

ii )ஆறு மாதங்களுக்குக் குறைவான காலவரையறை உள்ள கடப்பிதழ்

வெளிநாட்டுவிசா பெறுவதற்கும் அந்நிய நாட்டில் நுழைவதற்கும் காலாவதி ஆகாத கடப்பிதழ்கள் இருப்பினும், அதற்கு போதுமான கால வரைவு இருப்பது மிகவும் அவசியம் என்பதை வெளிநாட்டு பயணிகள் அறிய வேண்டும்.இந்தியர்கள், ஆறு மாதத்திற்குக் குறைவான காலாவதி தேதிகளைக் கொண்டுள்ளதங்களது கடப்பிதழ்களை, வெளிநாட்டு பயணத்திற்கு முன்னதாகவே புதுப்பிக்க வேண்டும்.முக்கியமாக தங்களது பெற்றோர்களுடன் பயணிக்கும் சிறார்களின் கடப்பிதழ்களைச் சரிபார்க்க வேண்டும்; ஏனெனில் கடப்பிதழ்களின் காலவரைவு சிறார்களுக்கு5 ஆண்டுகளும் பெரியவர்களுக்கு 10 ஆண்டுகள்மட்டுமே உள்ளன.உலகளாவிய மரபில் தற்போதைய நடைமுறையில் :"**உங்களின் கடப்பிதழ் 9 ஆண்டுகள்நிறைவடைந்திருந்தால், புது கடப்பிதழ் பெறுவதற்கான தகுந்த நேரமாகும்**".

iii) குறைவான விசா பக்கங்கள்

சில நாடுகள், கடப்பிதழில் பயன்படுத்தாதபக்கங்கள்இரண்டுக்கும் குறைவாக இருந்தால் அதனை ஏற்று கொள்ளாது. தயவு செய்து, கடப்பிதழில் விசாவிற்கு போதுமான பக்கங்கள் உள்ளதா என்பதனை உறுதிபடுத்திக் கொள்ளுங்கள். அங்கு கூடுதலான கையேடுகளோ / பக்கங்களோ கிடையாது. நீங்கள் முறையான வழிமுறைகளைப்பின்பற்றி உங்களது கடப்பிதழை புதுப்பித்துக் கொள்ளுங்கள். அடிக்கடி பயணம் செய்பவர்கள், 64 பக்கங்களைக் கொண்ட `ஜம்போ கடப்பிதழை' பெற்றுக் கொள்ளலாம்.

2. கடப்பிதழ் பற்றிய மேல்விவரங்களுக்குwww.indianhighcommission.com.my என்ற அகப்பக்கத்தை வலம்வாருங்கள்.